# இரட்சிப்பு
## RATCHIPPU

RATCHIPPU = SALVATION

| Volume-13 | March - 2024 | Issue-10 |
|---|---|---|
| Price Rs.5-00 | | Annual Subscription Rs.60/- |





## உயிர்த்தெழுதல்

**சான்றளிக்கப்பட்ட நற்செய்தி**

இயேசு,
மரித்தோரிலிருந்து
உயிர்த்தெழுந்ததினால்
பரிசுத்த ஆவியினாலே
பலமாய் ரூபிக்கப்பட்ட
தேவகுமாரனாயிருக்கிறார்.
ரோமர்-1:5



## இயக்குநர் கடிதம்... From Mission Director's Desk




கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! இயேசு கிறிஸ்துவின் இனிய திருப்பெயரில் அனைவருக்கும் ஈஸ்டர் நல்வாழ்த்துக்கள்.

தபசு காலங்களில் நம்மை நாமே சுய-பரிசோதனை செய்துகொண்டு ஜெபம்-வாசிப்பு-உபவாசம்-ஈகை ஆகியவற்றில் கருத்துடன் ஈடுபடுவோம். தபசு-கால தினசரி தியானங்கள், ஞாயிறு-வெள்ளி தியானக் கூட்டங்கள் மற்றும் தூய-வாரத்தின் ஆவிக்குறிய கூட்டங்கள், வியாகுல-வியாழன், புனித-வெள்ளி, ஈஸ்டர்-ஞாயிறு தினங்களின் ஆலய ஆராதனைகள் ஆகியவற்றில் தவறாமல் பங்குபெறுவோம். உயிர்த்தெழுலின் வல்லமையை பெற்றுக் கொண்டவர்களாக மாற்றுருவாக்கத்துக்கு நம்மை அர்ப்பணித்துக் கொள்ளுவோம்.

நம் நாட்டின் பாராளுமன்ற தேர்தல் விரைவில் நடைபெறவிருக்கிறது ஒடுக்கப்பட்ட மக்களின் நல்வாழ்வில் கரிசனை கொண்ட தலைவர்கள் ஆட்சிக்கு வர ஜெபித்திட, உழைத்திட, போராட நம்மை அர்ப்பணிப்போம்.

'ஜெப-ஜன்னல்' - ஜெப நேரங்கள் (மார்ச் 8, 15, 22), 'அனைவரும்-ஊழியத்தில்' - கைபிரதி ஊழிய திட்டம், இரட்சிப்பு வேதாகம போட்டிகள் ஆகியவற்றில் பங்குபெற உங்களை அன்புடன் அழைக்கிறோம். நமது பத்திரிக்கை ஊழியங்கள், காணொலி-செய்தி ஊழியங்கள், வலைதள ஊழியங்கள் (www.ratchippu.com), புத்தக-வெளியீட்டு ஊழியங்கள், கைப்பிரதி ஊழியங்கள், மிஷனரி ஊழியங்கள், கிராம ஊழிய ஐக்கியங்கள், திருச்சபை ஊழியங்கள் உள்ளிட்ட நம் இயக்குநரின் அனைத்து ஊழியங்களும் சிறப்பாக நடைபெற ஜெபித்துக் கொள்ளுங்கள்.

வேதாகமப் போட்டிக்கான பதில்கள், ஜெப-விண்ணப்பங்கள், அனுபவ சாட்சிகள் மற்றும் காணிக்கைகள் அனுப்புவோர் நமது ஊழிய இயக்குநரின் பெயருக்கு அனுப்பிவையுங்கள் (Online-வங்கி மற்றும் தொடர்பு விபரம்: பக்கம் 18-ல் தரப்பட்டுள்ளது).

தேவகிருபை உங்களோடு இருப்பதாக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில்
அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா

---

**வேத-வரிகள்-159** **யோவான் - 19:18**

## தமிழ் வேதாகமங்களின் ஒற்றுமைத் திரட்டு

**சத்திய வேதம் (ரேனியஸ்-1840)**

அவர்கள் இயேசுவானவரை கொல்கொதாவில் சிலுவையில் அடித்தார்கள்; அவரோடேகூட வேறிரண்டு பேரை இரண்டு பக்கங்களிலும் இயேசுவை நடுவிலுமாய் சிலுவைகளில் அடித்தார்கள்.

**பரிசுத்த வேதாகமம் (பவர்-1867)**

நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால் பூமிக்குத் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்; நீ மண்ணாய் இருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய்.

**திருவிவிலியம் (பொது-1995)**

அங்கே அவர்கள் இயேசுவையும் அவரோடு வேறு இருவரையும் சிலுவைகளில் அறைந்தார்கள்; அவ்விருவரையும் இரு பக்கங்களிலும் இயேசுவை நடுவிலுமாக அறைந்தார்கள்.

**பரிசுத்த பைபிள் (இ.ஆர்.வி-1998)**

கொல்கொதாவில் சிலுவையில் இயேசுவை ஆணிகளால் அறைந்தார்கள்; வேறு இருவரையும் சிலுவையில் அறைந்தனர். இயேசுவை நடுவிலும் ஏனைய இருவரை, இரு பக்கங்களிலும் நட்டு வைத்தார்கள்.

வசன தியானம்-149

# நடுச் சிலுவையில் இயேசு

## குற்றவாளிகள் நடுவில் குற்றுயிராய்

John-19:18 யோவான்-19:18

இயேசுவோடேகூட
வேறிரண்டுபேரை இரண்டுபக்கங்களிலும் இயேசுவை நடுவிலும் சிலுவைகளில் அறைந்தார்கள். யோவான்-19:18

கொல்கொதா மேட்டின் காட்சி நம்மை வியப்படைய வைக்கிறது. மூன்று சிலுவைகள் அங்கு காணப்பட்டன; நடுச்சிலுவையில் இயேசு இருந்தார். இயேசு தனிமையில் மரித்திருந்தால், நமது இரட்சிப்பு எப்படி நிறைவேறியிருக்கும்? கடவுள், இயேசு கிறிஸ்துவின் மரணத்தை அவ்விதம் வடிவமைக்கவில்லை. அக்கிரமக்காரரில் ஒருவனாக எண்ணப்பட்டார் என்கிற வேதவாக்கியம் (மாற்-15:28) நிறைவேறும் வகையில் இரண்டு குற்றவாளிகளுக்கு இடையில் இயேசு இறந்தார். அவர்கள், தாங்கள் செய்த குற்றங்களுக்கு தண்டனையாக இறந்தனர். நம்மைப் போலவே, அவர்களும் கடவுளுக்கு எதிராகப் பாவம் செய்தவர்கள். எனவே, அந்த இரண்டு குற்றவாளிகளும் நமது நிலையை சித்தரிக்கின்றனர்.

அவாகள் நடுவில் இயேசு மரித்தார்; ஆனால், அவர் குற்றமற்றவர். அவரில் பாவமோ குற்றமோ இல்லை. பலமுறை பிலாத்து அவரை குற்றமற்றவர் என்று அறிவித்தார். இயேசுவின் தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருந்த பலகையில் குற்றங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஆனாலும், அவர் கடவுளின் சாபம் மற்றும் தீர்ப்பின் கீழ் இறந்தார். அவருடன் இறந்த குற்றவாளிகளில் ஒருவன், ‘‘இயேசு எந்த தவறும் செய்யவில்லை’’ என்று விசுவாசத்தில் சாட்சியம் அளித்தார்; இயேசுவும் அவருக்கு மன்னிப்பு அளித்ததுடன், பரலோக பாக்கியமும் அளித்தார்.

ஆகவே, இயேசுவின் சிலுவை இரட்சிப்பை அறிவிக்கிறது. அது நமது பாவங்களைச் சுமந்தவரை சுட்டிக்காட்டுகிறது. இயேசுவின் மீதான விசுவாசத்தைதவிர நமக்கு வேறு தகுதி ஏதும் இல்லை என்பதை இந்த சிலுவைகள் சித்தரிக்கின்றன.

இந்த புனித வெள்ளியில், இயேசுவின் சிலுவை, நம் நடுவில் இருப்பது மிகவும் அவசியம் ஆகும். சிலுவை, கடவுளுடைய இரட்சிப்பின் மையத்தில் உள்ளது. நடுச்சிலுவையானது, ‘‘இயேசுவை நீங்கள் என்ன செய்தீர்கள்?’’ என்றும், ‘‘இயேசுவுடனான உறவில் நீங்கள் எங்கு நிற்கிறீர்கள்?’’ என்றும், ‘‘உங்கள் பாவங்களுக்காகவும் அவர் மரித்திருக்கிறார் என்பதை அறிவீர்களா?’’ என்றும், ‘‘அவரை உங்கள் இரட்சகராக ஏற்றிருக்கிறீர்களா?’’ என்றும் கேட்டு நமது பதிலை எதிர்பார்க்கிறது. நடுச்சிலுவையை நோக்கிப் பார்ப்போம். சிலுவையின் கேள்விகளுக்கு நேர்மறையாய் பதில் அளிப்போம். கடவுள் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.


REV. DHARMARAJA

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஊழியவு இயக்குநர்
நற்செய்தி வேதாகம அச்சுப்பதி வு ஊழியங்கள், சென்னை–93. தென்னிந்தியா.

ஈஸ்டர் சிறப்பு தேவசெய்தி...



அருட்திரு. தர்மராஜா

# ஈஸ்டர் ஒரு சான்றளிக்கப்பட்ட நற்செய்தி

## EASTER: A CERTIFIED GOSPEL

**Rev. S.J.D. Dharmaraja**
PRESBYTER AND MISSION DIRECTOR
GOOD TIDINGS BIBLE PRINTS MINISTRIES, SALIGRAMAM, CHENNAI, SOUTH INDIA

**ரோமர்-1:5 இயேசு, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பரிசுத்த முள்ள ஆவியின்படி பலமாய் ரூபிக்கப்பட்ட தேவகுமாரனாயிருக்கிறார்.**

சிலுவையின் செய்தி முதலில், இயேசுவை தோற்றுப்போனவராகக் காட்டியது; காரணம், உயிர்த்தெழுதலின் செய்தி இன்னும் முழுமையடையவில்லை. உயிர்த்த இயேசு, ஈஸ்டர் அன்று மகதலேனா மரியாள் (யோவா-20:15-18), எம்மாவுக்கு சென்ற 2-சீடர் (லூக்-24:13-32), 11-சீடர் (லூக்-24:36-43), பேதுரு (லூக்-24:34), தோமா (யோவா-20:26-31) மற்றும் பலரைச் சந்தித்தார். அவர், பாலஸ்தினாவின் பலதரப்பு மக்கள்முன் மகிமையின் சரீரத்தில் காணப்பட்டார். மக்கள் அவருடன் பேசினார்கள், சாப்பிட்டார்கள், அவரைத் தொட்டார்கள். இதையே பவுல், 1கொரி-15:5-8ல், ‘‘கிறிஸ்து முதலில் கேபாவுக்கும், பின்பு 12-சீடருக்கும் தரிசன மானார். பின்பு அவர் 500-பேருக்கு அதிகமான சகோதரருக்கு ஒரே வேளையில் தரிசனமானார்; பின்பு யாக்கோபுக்கும், அப்போஸ்தலர் எல்லாருக்கும், பின்னர், அகாலப்பிறவிபோன்ற எனக்கும் தரிசனமானார்.’’ எனச் சொன்னபின்னரே, உயிர்த்தெழுதலின் நற்செய்தி முழுமைப்பட்டது. இயேசுவின் உயிர்தெழுதல் ஒரு சான்றளிக்கப்பட்ட நற்செய்தியாக மாறி, கடந்த 2000 ஆண்டுகளாக திருச்சபையில் ரூபிக்கப்பட்ட நற்செய்தியாக உள்ளது. இயேசுவின் உயிர்த் தெழுதலால் சான்றளிக்கப்பட்ட நற்செய்திகள் சிலவற்றைத் தியானிப்போம்.

**1. உயிர்த்தெழுதல், கடவுள் தம் வாக்கை நிறைவேற்றுவார் என்பதை நிரூபிக்கிறது:** (மாற்கு-8:31; மத்-16:21; லூக்-9:22). இயேசு: ‘‘மனுஷகுமாரன் பிரதான ஆசாரியர்கள் மற்றும் வேதபாரகர்களால் நிராகரிக்கப்பட்டு கொல்லப் படுவார் ஆனால், 3-ம் நாள் உயிர்த்தெழுவார்’’ என்றும் இயேசு பலமுறை சொன்னார் (லூக்-9:22). கடவுள், தாம் சொல்வதைச் செய்வார் என்பதை உயிர்த்தெழுதல் நிரூபித்துக்காட்டுகிறது.

பெந்தெகொஸ்தே நாளில் பேதுரு, “நசரேயனான இயேசு, கடவுளின் வார்த்தையின்படி உங்களிடம் ஒப்படைக்கப்பட்டார்; நீங்கள், அவரை சிலுவையில் கொன்றீர்கள். ஆனால், கடவுள் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினார்; ஏனெனில் மரணம் அவரை மேற்கொள்ள இயலாது” (அப்-2:22-24) என தெளிவாக பிரசங்கிக்கிறார். அவ்விதமாகவே, பவுலும், ‘‘கிறிஸ்து, வேதவாக்கியங்களின்படி நம்முடைய பாவங்களுக்காக மரித்தார்; வேதவாக்கியங்களின்படி 3-ம் நாளில் எழுப்பப்பட்டார்” என்று கடவுளுடைய முன்னறிவிப்பின் வார்த்தையைக் குறிப்பிடுவதை 1கொரி-15:3,4ல் நாம் வாசிக்கிறேம். இந்நாட்களில் ஈஸ்டர் பண்டிகையை கொண்டாடவிருக்கிற நாமும், கடவுள் வேதவசனங்கள் வாயிலாக நமக்கு முன்னுரைத்த காரியங்களை நிச்சயமாக நிறைவேற்றி நம் வாழ்வில் மகிழ்ச்சியின் நற்செய்தியை அளிப்பார் என்பதை விசுவாசித்துக் காத்திருப்போம்.

**2. உயிர்த்தெழுதல், இயேசு மாத்திரமே இரட்சகர் என்பதை நிருபிக்கிறது:**

பேதுரு, வேதபாரகர், பரிசேயர், சட்ட-ஆசிரியர்களிடம் கூறியது: ‘‘உங்களால் சிலுவையில் அறையப்பட்ட இயேசு கிறிஸ்து, வீடுகட்டுகிறவர்களான நீங்கள் ‘நிராகரித்த-கல்’; ஆனால், அதுவே தலைக்கல்லானது. ஏனென்றால், இயேசுவால் அன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே இயேசுவின் நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை (அப்-4:10-12).

இயேசு ‘சத்தியங்களை கற்பிப்பவர்’ அல்லது ‘தெய்வீக குணத்திற்கு உதாரணம்’ மாத்திரம் அல்லர். அவரே சத்தியம்; அவரே தெய்வீக இரட்சகர் என்பது உயிர்த்தெழுதலால் சான்றளிக்கப்படுகிற நற்செய்தியாகும். இயேசு சொன்னது: “நானே வழியும் உண்மையும் ஜீவனுமாயிருக்கிறேன்.” (யோவா-14:6).

எனவேதான் தூய. பவுல் சொல்கிறார்: ‘‘பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் அங்கிகரிக்கத்தக்க வாத்தைதையுமாக இருக்கிறது. (1தீமோ-1:15)

**3. உயிர்த்தெழுதல், கிறிஸ்துவின் தியாகம் வீண்போகவில்லை என்பதை நிருபிக்கிறது:** (ரோம-4:25)... கிறிஸ்து மரணத்தின் மீது வெற்றிபெற்றதால், அவருடைய தியாகம் வீண் போகவில்லை என்பது உறுதிப்படுகிறது. கல்லறையிலிருந்து எழும்பும் ஆற்றல்பெற்ற ஒருவர், ஏன் முதலில் இறந்தார் என்பதற்கு விளக்கம் வேண்டும். இந்த குழப்பமான கேள்விக்கு, வேதம் ஒரே ஒரு பதிலை மட்டும் தருகிறது: ‘‘அவர் நம்முடைய பாவங்களுக்காக மரணத்திற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு; நம்முடைய நீதிக்காக உயிர்த்தெழுப்பப்பட்டார்” (ரோம-4:25).

உண்மையில், நாம் அனைவரும் சில-பல ஆண்டுகளுக்கு முன்பு நம் பாவங்களுக்காக கல்வாரியில் சாகவிருந்தோம். இயேசு அதே கல்வாரிக்குச் சென்று சிலுவையில் நமக்காக மரித்தார். ‘‘நாம் பாவிகளாக இருக்கையில் நமக்காக மரிக்கத் தமது குமாரனைத் தருமளவுக்கு, தேவன் நம்மில் அன்புகூர்ந்தார்” (யோவா-3:16; ரோம-5:8); நாமும் மீட்கப்பட்டிருக்கிறோம். இயேசுவின் தியாகம் இங்கு வீணாகவில்லை. உயிர்த்தெழுதலின் சான்றுபெற்ற நற்செய்தி இதுவே.

இயேசு மரணத்தை வென்றார் என்று நீங்கள் நம்புகிறீர்களா? நம்பினால், அவர் உங்களுக்குப் பதிலாளாக தியாகமாக இறந்தார் என்று நீங்கள் நம்பலாம். உங்களுக்கு இரட்சிப்பை வழங்குவதற்கு செய்யப்பட வேண்டிய தியாகங்கள் அனைத்தையும் அவர் செய்து முடித்துள்ளார். அந்த தியாகங்கள் ஒன்றும் வீண்போகவில்லை நாம் கிறிஸ்துவின் உயித்தெழுதலால் மீட்கப்பட்டிருக்கிறோம் நமது மரணம் கிறிஸ்துவின் மரணத்தால் வெல்லப்பட்டது. இது கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலால் சான்றளிக்கப்பட்ட மிகப்பெரிய நற்செய்தியாகும்..

**4. உயிர்த்தெழுதல், கடவுளின் வல்லமை மாற்றுருவாக்கத்தை தரும் என்பதை நிரூபிக்கிறது:** (எபே-1:19-20).... பவுல்: ‘‘கிறிஸ்து நமக்குத் தரும் வல்லமை, கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பியபோது கடவுள் பிரயோகித்த வல்லமைக்கு ஒப்பானது’’ (எபே-1:19-20) என்று சொன்னார்... மட்டுமல்ல, ‘‘தேவன் தம்முடைய வல்லமையினால் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினார்; அவர் நம்மையும் எழுப்புவார்’’ (1கொரி-6:14) என்றும் சொல்கிறார்.

இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பிய வல்லமை நிச்சயமாக மனிதரையும் மாற்றுருவாக்க முடியும். கிறிஸ்தவ தூய-வாழ்வு என்பது தீய பழக்கங்களிலிருந்து சீர்திருந்துவது மாத்திரம் அல்ல; அது வாழ்வின் ஒரு நேர்மையான மாற்றம், அதாவது நன்மைக்கான, வளர்ச்சிக்கான, அமைதிக்கான, விடுதலைக்கான ஒரு முழுமையான மாற்றுருவாக்கம் ஆகும். இத்தகைய மாற்றத்தையே பரி.பவுல், ‘‘ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால், அவன் புதிய படைப்பு; பழையது ஒழிந்துவிட்டது, புதியது வந்துவிட்டது!’’ என 2கொரி-5:17ல் குறிப்பிடுகிறார்.

இயேசுவின் உயிர்த்தெழுதல் முதலாவதாக அவருடைய சீடர்களை மாற்றுருவாக்கியது. சாதுக்களாக இருந்த சீடர்கள் உயிர்த்தெழுதலின் பின், ஜெப-வீராகளாகவும், துணிவு மற்றும் ஞானம் நிறைந்தவர்களாகவும், தியாகிகளாகவும், விடுதலை-வீரர்களாகவும் மாற்றுருவாக்கம் பெற்றார்கள். மட்டுமல்ல கடந்த 2000 ஆண்டுகளில் இயேசுவின் உயிர்த்தெழுதல், கோடானுகோடி மக்களுக்கு மாற்றுருவாக்கம், நிறைவாழ்வு மற்றும் புதுவாழ்வு தந்து அவர்களை புதுப்படைப்பாக மாற்றும் கருவியாக செயல்பட்டுவருகிறது. உயிர்தெழுதலின் நற்செய்தியை கேள்விப்படும் மக்கள் அனுதிமும் சிலுவையை நோக்கியும், இரட்சிப்பின் நற்செய்தியை நோக்கியும், கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபையை நோக்கியும் ஓடிவந்துகொண்டிருக்கின்றனர் என்பதும் சான்றளிக்கப்பட்ட நற்செய்தியாகும்.

கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலின் வல்லமையை உணர்ந்தவர்களாக மாற்றுருவாக்கத்துக்கும், உயிர்த்தெழுதலால் ரூபிக்கப்பட்ட நற்செய்திக்கும் நம்மை அர்பணிப்போம். உயிர்தெழுதலின் மாற்றருவாக்க வல்லமையை அநேகருக்கு அறிமுகம் செய்வோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக ஆமென்.

கிறிஸ்துவின் பணியில் உங்களுடன்
**அருட்திரு.எஸ்.ஜே.டி. தர்மராஜா**

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஆயர் மற்றும் ஊழிய இயக்குநர், நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள், சாலிகிராமம், சென்னை-93, தென்னிந்தியா.

வேத ஆராய்ச்சி - 82



Rev. Dr. சுரேஷ் ராஜன்

# சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள்

Author: Rev.Dr. D. Suresh Rajan

## சங்கீதம் – 82

**EPISODE-82**

சங்கீதம்: ஏழைக்கும் திக்கற்ற பிள்ளைக்கும் நியாயஞ்செய்து, சிறுமைப்பட்டவனுக்கும் திக்கற்றவனுக்கும் நீதி செய்யுங்கள். பலவீனனையும் எளியவனையும் விடுவித்து, துன்மார்க்கரின் கைக்கு அவர்களைத் தப்புவியுங்கள் அறியாமலும் உணராமலும் இருக்கிறார்கள், அந்தகாரத்திலே நடக்கிறார்கள்; தேசத்தின் அஸ்திபாரங்களெல்லாம் அசைகிறது தேவனே, எழுந்தருளும், பூமிக்கு நியாயத்தீர்ப்புச் செய்யும்; நீரே சகல ஜாதிகளையும் சுதந்தரமாகக் கொண்டிருப்பவர். சங்கீதம்–82:3,4,5,8.

**முன்னுரை:-**

சமூகநீதி என்ற சொல் இந்நாட்களில் எங்கும் அதிகமாகப் பயன் படுத்தப்படுவதை நாம் அறிந்திருக்கிறோம். பண்டைய காலத்திலும் சரி, இந்த காலகட்டங்களிலும் சரி, ஒரு கூட்டத்தார் மற்றொரு கூட்டத்தாரையும், ஒரு மனிதன் மற்றொரு மனிதனையும் ஒடுக்குவது என்பதும், அநியாயம் செய்வது என்பதும், பாதிக்கப்பட்டவர்களுக்கு சரியான நியாயம் வழங்கப்படாமலிருப்பதும் நாம் அறிந்த உண்மையே.

ஆசாபினால் எழுதப்பட்டுள்ள இந்த சங்கீதம், இறைமக்கள் எவ்வாறு வாழவேண்டும் என்பது குறித்து நமக்கு நல்ல பல ஆலோசனைகளை வழங்குகிறது.

**1. தேவன் நியாயாதிபதி:- (வசனம் 1)**

‘‘தேவசபையில் தேவன் எழுந்தருளியிருக்கிறார்’’ ‘தேவன்’ என்ற சொல்லுக்கு இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள ‘ஏலோஹீம்’ என்ற எபிரேய பதம் ஒரு பன்மைச் சொல் ஆகும். இது, பிதா - குமாரன் - தூய ஆவி ஆகிய திரியேக தேவனையோ அல்லத பல பிறமத கடவுள்களையோ அலலது தேவதூதர் கூட்டத்தையோ குறிக்கலாம் என வேத வியாக்கியானிகள் கருதுகின்றனர். எப்படியாயினும் அமைத்துலகையும் உருவாக்கிய படைப்பாளியாகிய இறைவனே நீதி செய்பவர் என்ற கருத்து இங்கு வெளிப்படுத்தப்படுகிறது.

‘‘தேவனே, எழுந்தருளும்; பூமிக்கு நியாயத்தீர்ப்புச் செய்யும்’’ (வச-8) என்று இந்தக் கருத்து ஆசாபினால் உறுதி செய்யப்படுகிறது. ஆகவே, இறைவனே எல்லா அதிகாரங்களுக்கும் மேலாக நின்று நியாயம் செய்கிறவர்.

**2. சமூக நீதிக்கான அறைகூவல்:- (வசனம் 3,4)**

நாம் அனைவரும் கிறிஸ்துவின் பிரதிநிதிகளாக இவ்வுலகத்தில் அவரது சமத்துவ மான இராஜ்யம் கட்டப்படுவதற்கு ஏதுக்களாக இருக்கவேண்டும். உலகத்தில் பலவிதமான அநீதிகளையும் கொடுமைகளையும் குறித்துக் கேள்விப்படுகிறோம். ஆனால், கிறிஸ்துவின் பெயர் தரிப்பிக்கப்பட்ட மக்கள் மத்தியிலும், திருச்சபை கள்-சங்கங்கள் மத்தியிலும் இப்படிப்பட்ட அவலங்கள் காணப்படுவது மிகவும் துரதிஷ்டமே. பணத்தைக் கையூட்டாகப் பெற்றுக்கொண்டு ஏழைகள், வாக்கற் றோர், வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ளோர், ஒடுக்கப்பட்டோர் ஆகியோரின் உரிமைகளைப் பறித்துக்கொண்டு அவர்களை ஓரங்கட்டிவிடுவதை எங்கும் நாம் பார்க்க முடிகிறது.

இன்று இச்சங்கீதத்தின் வாயிலாக இறைவன் கொடுக்கும் கட்டளை, ''ஏழை களுக்கும் திக்கற்ற பிள்ளைகளுக்கும் நியாயம் செய்து சிறுமைப்பட்டோருக்கும் திக்கற்றோருக்கும் நீதி செய்யுங்கள்'' ''பலவீனரையும் எளியோரையும் விடு வித்து, துன்மார்க்கரின் கைக்கு அவர்களைத் தப்புவியுங்கள்.'' (வச-3,4).

ஆம் அன்பர்களே! இறைவனின் பிரதிநிதிகளாக நாம், நமது வரையறைக்கு உட்பட்ட எல்லா நிலைகளிலும் நீதி, நியாயம் செய்யத் தவறாதிருப்போம்.

**3. இறைவனின் எதிர்பார்ப்பு:- (வசனம் 6)**

''நீங்கள் தேவர்களென்றும், நீங்களெல்லாரும் உன்னதமானவரின் மக்கள் என்றும் நான் சொல்லியிருந்தேன்''. இறைவன் மனுக்குலத்தைப் படைத்தபொழுது அவர்களை தமது ரூபத்தின்படியும், சாயலிலும் படைத்தார் என்று திருமறை நமக்குப் போதிக்கிறது (ஆதி-1:26). ஆகவே, அவருடைய மக்களாகிய நாம், அவரைப்போலவே இருக்கவேண்டும் என்ற தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார். ''ஆனாலும் நீங்கள் மனுஷரைப்போல செத்து, லோக பிரபுக்களில் ஒருவனைப் போல விழுந்துபோனீர்கள்'' (வச-7) என்று சொல்லி இறைவன் தம்முடைய ஆதங்கத்தை வெளிப்படுத்துவதை இங்கு காண்கிறோம்.

''வெந்ததைத் தின்று, வெறுமனே வாழ்ந்து, விதி வந்தால் சாவோம்'' என்று வாழும் இறை அறிவில்லா மக்களைப்போலவும், அநியாயமும் அக்கிரமமும் நிறைந்தவர்களாய் கைக்கூலி வாங்கி முகதாட்சண்யமும், பாரபட்சமுமாய் நடந்து கேவலமாய் வாழும் உலக அதிகாரிகளைப்போலவும் நோக்கமற்று வாழும் கிறிஸ்தவர்களைப் பார்த்து கவலைகொள்ளும் தேவனுடைய அங்கலாய்ப் பாகவே இப்பகுதி அமைந்துள்ளது.

தேவன் நமக்குக் கொடுக்கும் பொறுப்புகளில் நாம் ஜாக்கிரதையாய் இருந்து நீதி நியாயத்தை செயல்படுத்துவதையே தேவன் நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார்.

**முடிவுரை:-**

அன்பான இறைமக்களே! ஆண்டவருடைய எதிர்பார்ப்பையும், நம்முடைய வாழ்வில் கடவுளின் விருப்பங்களுக்கும் நமது செயல்பாடுகளுக்கும் இடையில் இருக்கும் முரண்பாடுகளையும் உணர்ந்தவர்களாக மனம் கசந்து இறைவனிடம் ஒப்புரவாகி, நம்முடைய அதிகாரத்துக்கு உட்பட்ட சூழ்நிலைகளில் நீதி நியாயம்

செய்து, இறைமக்களாய் இறையரசை இவ்வுலகத்தில் நிலைபெறச்செய்ய இறைவனுக்கு நம்மையும் நம் செயல்பாடுகளையம் கையளிப்போம்.

இறைவன்தாமே அவருக்கு உகந்த சாட்சிகளாய் நாம் அனைவரும் வாழ நம் மேல் தம் அருளை பொழிந்தருளுவாராக. உங்கள் அனைவருக்கும் எனது அன்பின் உயிர்த்தெழுந்த திருநாள் - ஈஸ்டர் நல்வாழ்த்துக்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

ஆசிரியர்: அருட்திரு. அறிவர். டி. சுரேஷ் ராஜன், இணை நிறுவனர், வேதாகம மொழிபெயர்ப்பு முயற்சிகள், கோயம்புத்தூர். தென்னிந்தியா.

**Good Tidings Bible-Prints Ministries**

**நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள்**

**Good Seeds - Gospel Tracts**
**நல்ல விதைகள் - கைபிரதிகள்**

சுவிசேஷ ஊழிய பயன்பாட்டுக்காக நற்செய்தி கைப்பிரதிகளை வெளியிட்டு அவற்றை கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு விநியோகம் செய்துவருகிறோம். மட்டுமல்ல நற்செய்திப்பணி செய்வோருக்கு கைபிரதிகளை இலவசமாய் வழங்கி வருகிறோம். ஒரு-வகை கைப்பிரதி வெளியிட ஆகும் செலவு ரூ.3500/- மட்டும். கைப்பிரதிகளை Sponsor செய்து அனைத்து மக்களும் இயேசுவை அறிந்திட உதவுங்கள். Sponsor செய்ய விரும்பும் அன்பர்கள் நமது ஊழிய இயக்குநரை தொடர்பு கொள்ளுங்கள். கைப்பிரதிகளை Sponsor செய்த தேவபிள்ளைகளுக்கு எங்கள் நன்றி. கைப்பிரதி களை எங்களிடம் பெற்று ஊழியங்களில் பயன்படுத்த அன்புடன் அழைக்கிறோம்.

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஊழிய இயக்குநர்
நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள், சென்னை-93. தென்னிந்தியா.

## 'அனைவரும் ஊழியத்தில்'

ஒவ்வொருவரும் 30-கைப்பிரதிகளை விநியோகிக்கும் திட்டம்

**இத்திட்டத்தின் செயல்முறை பின்வருமாறு**

1. இத்திட்டத்தில் பங்குபெற, உங்கள் தபால் முகவரியை **கடிதம்** அல்லது **வாடஸ்-அப்-ல்** எமக்கு அனுப்பவேண்டும். (எமது முகவரி - வாட்ஸ்-ஆப் எண் பக்கம்-18ல்).

2. முகவரி கிடைத்தவுடன் தங்களுக்கு 30-கைப்பிரதிகளை அனுப்பிவைப்போம். நீங்கள் வீட்டிலிருந்தவாறே உங்கள் அண்டைவீட்டார், காய்கறி விற்போர், பால் போடுவோர், எலக்ட்ரீஷியன், பிளம்பர், கார்பென்டர், டிரைவர், குப்பை-வண்டிக்காரர், வீட்டு-வேலைசெய்வோர், சமையல் எரிவாயு வெண்டர், தபால்க்காரர்கள், மெக்கானிக்குகள் ஆகியோரில் இயேசுவை அறியாதவர்களுக்கு ஜெபத்துடன் கைப்பிரதிகளை வழங்க வேண்டும். கைப்பிரதிகளை வெளியூரில் வாழும் இயேசுவை அறியாத உங்கள் உறவினர் மற்றும் நண்பர்களுக்கு தபால்-உறையில் அனுப்பி வைக்கலாம்.

3. கைப்பிரதிகள் தீர்ந்தவுடன் விருப்பம் தெரிவித்தால் மீண்டும் 30-கைப்பிரதிகளை உங்க ளுக்கு அனுப்பிவைப்போம். இத்திட்டத்தில் இணைந்து நற்செய்தி பரவ உதவிடுங்கள்.

கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு இக்கைப்பிரதிகளை வழங்குவதைத் தவிர்க்கவும்.

# வேதாகம போட்டி–160 சரியான பதிலளித்தோர்

1) அமலியா லோகநாதன் TVM
2) அமிர்தகனி பொன்ராஜ் CHE
3) அன்பு சுதந்திரம் TIN
4) ஏஞ்சல் சி. TIN
5) ஏஞ்சல் ராஜதுரை CHE
6) ஏஞ்சலின் பிரியா TIN
7) ஏஞ்சலின் ரூஸ்வெல்ட் CHE
8) ஏஞ்சலின் வில்லியம்ஸ் CHE
9) அன்னாள் ஜெபக்கனி CBE
10) அனி பாய் ஜாண் TIN
11) அனிதா மோகன்ராஜ் ERO
12) அரோமா சாத்ராக் TIN
13) ஆர்தர் மாசில்லாமணி CHE
14) அருள்செல்வி VIR
15) அருள்செல்வி ஜாண்ஸன் TIN
16) பாமா மாதவன் KAL-AP
17) பாலின் பிரியங்கா ஜாண் BAN
18) பெல்சி தங்கராஜ் CHE
19) பெனிட்டா பிராங்க்ளின் CHE
20) பெ.ஃ.ட்டி பிரின்ஸ் CHE
21) பியூலா அலெக்ஸ் CHE
22) பியூலா ஜேசுராஜன் PON
23) செலினா பென்சி வில்சன் DR, KUW
24) சந்திராபாய் மாசிலாமணி AVD
25) சந்திரலேகா KAL-AP
26) சந்திரா மேரி விஜயன் BAN
27) சந்திரா சாமுவேல் TIN
28) சார்லஸ் ஃபின்னி DR CHE
29) சார்லஸ் சாலோமோன் WG-CMR SHI
30) சார்லட் டேவிட் CHE
31) சித்ரா பெஞ்சமின் TVR
32) கிறிஸ்டல் ஜாய் யோபு CKA-TPT
33) கிறிஸ்துதாஸ் GOP
34) கிறிஸ்டி ஞானராஜ் CHE
35) கிறிஸ்டி மெர்சி ராஜ்குமார் TUT
36) சிசிலி புஷ்பம் டேவிட் CHE
37) சிந்தி ஜாஷ்வா TAN
38) டெய்ஸி ஜெபதாஸ் TCY
39) டெய்ஸி சாம் KAL-AP
40) டேனியல் தாமஸ் TIN
41) டேனிங் சொர்ணா ஜெஸ் TIN
42) டேவிட் ஜே.ஆர். CHE/CBE
43) தெபோராள் ஆனந்தமணி TUT
44) தேவமணி ஆபிரகாம் TUT
45) தேவநேசம் ராஜாசிங் CHE
46) டோராபாய் CHE
47) எலிசபெத் செல்லத்துரை CHE
48) எமிமாள் மில்டன் CHE
49) எமிமாள் சாமுவேல் (ஜெஸிக்கா) MDU
50) எஸ்தர் D.R. TIN
51) எவாஞ்சலின் ஜோன்ஸ் DR. SLM
52) குளோரி ரவீந்திரன் TIN
53) ஞானம் ஜெபராஜ் TIN
54) ஞானம் பிலிப் CHE
55) ஞானராணி G. TVL
56) ஞானசெல்வி மோசஸ் NJ-USA
57) ஞானசுந்தரி நாகராஜன் TIN
58) கோல்டா ஜேசுபாதம் MUM
59) கிரேஸ் டேனி TEN
60) கிரேஸ் பொன்மணி ரெக்ஸ் CHE
61) கிரேஸ் பிரின்ஸ் APM-TEN
62) கிரேஸ்லின் சாந்தி TIN
63) கிரேஸி கிறிஸ்டோபர் CHE
64) கிரேஸியா ஜெயபால் CHE
65) கிரிசெல்டா செய்லர் CHE
66) ஹெலன் ஜான்சிராணி TIN
67) ஹெலென் ஜெனிபர் பாண்டியன் CHE
68) ஹெலன் திலக் TUT
69) ஹேமா அஜீத் CHE
70) ஹேமா கேப்ரியேல் BAN
71) ஹெப்சி அசரியா PON
72) ஹெப்சிபா மங்களராஜ் TIN
73) ஹிம்லா ராஜகுமாரி CHE
74) இளவரசி ஜோபிதா CBE
75) இந்திரா கெத்ஸி டேவிட் TIN
76) இன்பவல்லி கலைச்செல்வன் MDU
77) ஜமீலா செல்வராஜ் CHE
78) ஜேன் தர்மராஜ் MAR
79) ஜேன்ஸ் (ஜான்ஸி) ANI
80) ஜாஸ்மின் ஞானதாஸ் CHE
81) ஜெபா ஜெயராஜ் AVD
82) ஜெபக்குட்டி மோசஸ் TIN

83) ஜெபரஞ்சிதம் மொர்லின் TUT
84) ஜெபசீலி கிளின்டன் CHE
85) ஜெபா சீனி MAR TIN
86) ஜீவா டேவிட் சாலோமோன் APM-TEN
87) ஜெமீலா நிக்ஸன் CHE
88) ஜெனிலா CHE
89) ஜென்ஸி ஞானேஷ் MUM-MS
90) ஜெனித்தா செல்வின் TIN
91) ஜெனிட்டா ஷெருபா ஞானவேல் DHA
92) ஜெரின் ஸ்டீபன் MUM
93) ஜெஸி செல்லதுரை CBE
94) ஜெஸி ஜெயக்குமார் TIN
95) ஜெயா ஆல்பர்ட் KUM
96) ஜோனா ஸ்டீபன் AVD
97) ஜாய்ஸ் பாண்டியன் CHE
98) ஜோஸ்பின் ஜெஸி CHE
99) ஜுலியட் ஜெபா CHE
100) ஜுலியட் ஜெயக்குமார் TIN
101) கலா கிருபாகரன் TIN
102) கலையரசி செல்வராஜ் CHE
103) கஸ்தூரி எலியாஸ் TIN
104) கிங்ஸ்லி தங்கமணி CHE
105) கோயில்பிள்ளை ஞானத்தாய் APM
106) லதா மைக்கேல்ராஜ் CHE
107) லீலா டேவிட் CHE
108) லீலா ஜோஸப் CBE
109) லீனா எலிசபெத் CKA-TPT
110) லில்லி ஜாண்ஸன் CHE
111) லிஸி டென்சிங் TIN
112) மல்லிகா ஜாய்ஸ் (ஜஸ்டினா) JAY
113) மல்லிகா V. CHE
114) மணிமேகலை ஜெயக்குமார் TIN
115) மரிய பாப்பா CHE
116) மரியாள் ஜே.எஸ். TUT
117) மேபல் கிறிஸ்டியன் CHE
118) மெஜிலா ஜோஷ்வா TUT
119) மொர்சி ஃபுளோரா பாஸ்கர் VEL
120) மெரிட்டா ஜெயபாலன் TCY
121) மியூரியல் புஷ்பராஜ் CHE
122) நிக்ஸன் எவர்பிரைட் TIN
123) ஆலிவ் ஜெயபாலன் CBE
124) பாக்யபாய் ஆரோன் TIN
125) பாக்ய மேரி CHE
126) பமீலா எட்வின் KAN
127) பெர்சி பால் பொன்சிங் TUT
128) பிங்க்லின் சந்தோஷ் CHE
129) பிரேமா பூபாலன் AVD
130) பிரேமா ஜானி TEN
131) பிரேமா ஸ்டாலின் CHE
132) பிரின்ஸ் தயாநிதி CHE
133) பிரின்ஸ்லின் ஷைனி APM-TEN
134) பிரிசில்லா தாஸ் CHE
135) பிரிஸ்கில்லாள் சசி CBE
136) பிரியா ராஜ்குமார் CHE
137) ரேச்சல் ஈஸ்டர் VEL
138) ரேச்சல் கனகராஜ் CBE
139) ராஜகுமாரி சன்னியாசிமுத்து TUT
140) ராஜபிரமீளா TPT
141) ராஜ்மேரி சார்லஸ் KER
142) ரமோலா அதிசயராஜ் TIN
143) ராணி ஃபுளோரா APM-TEN
144) ராணி பிரபாகர் TIN
145) ராணி சாமுவேல்ராஜ் CHE
146) ரத்னாவதி பாண்டியன் CHE
147) ரோஸ்லின் மார்கிரெட் CHE
148) ரோஸி ஸ்டீபன் CHE
149) ரூபவதி நோபிள் TIN
150) ரூத் HAPP-TCY
151) ரூத் ஜாண்ஸன் TIN
152) சலோமி மனோகர் DR. CHE
153) சாம்பு ஜெயச்சந்திரன் MDU
154) சாமுவேல் டேவிட் TPT
155) சாரா பாலசிங் MDU
156) சரோஜா செல்வராஜ் CHE
157) சரோஜினி எலிசபெத் CHE
158) செல்வ அமுதா ஜார்ஜ் CHE
159) செல்வ பென்ஸி ஆபேல் KOT-AP
160) செல்வராஜ் K. CBE
161) செல்வராணி ஆல்பர்ட் CHE
162) செல்வராணி G. CHE
163) செல்வி அமிர்தராஜ் TVR
164) ஷாலி எடிசன் CHE
165) சந்தியா ERO
166) செல்வி WAS-CHE
167) சாந்தி ஆல்பர்ட் PCT
168) சாந்தி ஆசேர் TIN
169) சாந்தி ஜெபக்கனி KAL
170) சாந்தி ஜெயசீலன் CHE

171) சாந்தி ரோஸ் CBE
172) ஷர்மிளா செல்வராஜ் DR. CUD
173) ஷேபா சந்தோஷ் CHE
174) ஷீபா சாம்ஸன் CHE
175) ஷீலா G. PNR-TVL
176) ஷீலா இஸ்ரேல் TCY
177) ஷெரீன் ஜெபராஜ் PAN
178) சில்வியா ஃபின்னி DR. CHE
179) சவுந்தரம் சாலமோன் CHE
180) ஸ்டெல்லா டேவிட் TUT
181) ஸ்டெல்லா சூசைய்யா TUT
182) ஸ்டெல்லா கனகராஜ் CHE
183) சுகிர்தா ஆல்வின் CHE
184) சுகிர்தா சின்னதுரை TIN
185) சுஜாதா சாமுவேல் CHE
186) சுமித்ரா B. CHE
187) சுந்தரிபாய் TUT
188) சுந்தரி அன்பழகன் TEN
189) சுசீலா தியோடர் TCY
190) சுவர்ணலதா அற்புதராஜ் CHE
191) தனசீலி ஞானராஜ் CHE
192) தாரா மாணிக்கம் CHE
193) தெல்மா ஸ்டேன்லி MDU
194) உமா குளோரி CHE
195) வனஜா ஹெர்பர்ட் TIN
196) வசந்தா அன்பன் TIN
197) வசந்தா சந்திரசேகர் CBE
198) வசந்தா துரைராஜ் OFT-TCY
199) வசந்தி கருணாகரன் CHE
200) வசந்தி வாசன் CHE
201) விஜயராணி A. CHE
202) விஜி டேனியல் CHE
203) விமலா ஜெயக்குமார் TUT
204) விண்ணரசி ரோஸ் CHE
205) வினோலியா ஜேம்ஸ் TUT
206) வினோலியா வில்சன் VAN
207) வைலட் கிறிஸ்டோபர் TIN
208) வைலட் சைசஸ் CHE

## வேதாகமப் போட்டி-158

## சரியான பதிலளித்தோர்

1) பெஃட்டி பிரின்ஸ் CHE
2) சித்ர பாலா ERO
3) ஞானசெல்வி மோசஸ் USA
4) நகோமி நிர்மலா CHE
5) ரோஸி ஸ்டீபன் CHE
6) சாம்பு ஜெயச்சந்திரன் MDU
7) சந்தியா ERO
8) தாரா மாணிக்கம் CHE
9) வைலட் சைரஸ் CHE

# வேதாகம போட்டி–160 (அப்போஸ்தலர்)

## சரியான விடைகள்

1. அகபு அப்:-11:28
2. பொல்லாத ஆவி அப்:-19:15
3. ஆவியானவர் பிலிப்புவிடம் அப்:-8:29
4. பேதுரு அப்:-10:9
5. அனனியா அப்:-5:2
6. யூதாசைக் குறித்து அப்:-1:16
7. பிலிப்பு அப்:-21:8,9
8. கமாலியேல் அப்:-5:39
9. சரி - அப்:-13:37
10. தவறு - அப்:-20:35
11. தவறு - அப்:-10:15
12. சரி - அப்:-17:30
13. இ - கைகளால் அப்:-7:48
14. ஆ - பவுல் அப்:-14:12
15. ஆ - விசுவாசிகள் அப்:-2:44
16. இ - மனுஷருக்கு அப்:-5:29
17. ஏரோது அப்:-12:21-26
18. தேமேத்திரியு அப்:-19:23-29
19. யூதாஸ் அப்:-1:16-20
20. பவுலின் வீடு அப்:-28:30,31

# வேதாகம போட்டி-161

வேதவசன இருப்பிடத்துடன் பதிலளிக்கவேண்டும். கடைசி நாள்: 25-03-2024

**வேத–பகுதி: ரோமர் முழுவதும்**

1. யாருக்கு வருகிற கூலி கிருபை என்று எண்ணப்படாமல் கடன் என்று எண்ணப்படும்?
2. யார் வெளிப்படுவதற்காக சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடு காத்திருக்கிறது?
3. விசுவாசம் கேள்வியினால் வரும்; கேள்வி எதினாலே வரும்?
4. நீதிப்பிரமாணத்தை தேடின இவர்கள், அதை அடையவில்லை? யார் இவர்கள்?
5. பிறனிடத்தில் அன்புகூருகிறவன் எதை நிறைவேற்றுகிறான்?
6. ஒருவன் பாவம் செய்ததால் உண்டான தீர்ப்பு எதற்கு ஒப்பானதல்ல?
7. தேவனுடைய கிருபைவரங்களும், அழைத்த அழைப்பும் எப்படிப்பட்டவைகள்?
8. நியாயப்பிரமாணத்துக்கு கீழ்ப்படியாமலும் கீழ்ப்படியக்கூடாமலும் இருப்பது எது?
9. 'பாவம் சுருங்கின இடத்தில் கிருபை அதிகமாய் பெருகிற்று' - **சரியா, தவறா?**
10. 'பகிர்ந்து கொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன்' - **சரியா தவறா?**
11. 'மாம்ச சிந்தை தேவனுக்கு விரோதமான பகை' - **சரியா தவறா?**
12. 'அன்பு நியாய்பிரமாணத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது' - **சரியா தவறா?**
13. நியாயப்பிரமாணத்தை சார்ந்தவர்கள் சுதந்தரவாளிகளானால் '**இது**' வீணாய்ப்போம்:
அ) நியாயம் ஆ) கிருபை இ) விசுவாசம் ஈ) மீட்பு
14. சமாதானத்தின் தேவன் '**இவனை**' உங்கள் கால்களின்கீழே நசுக்கிப்போடுவார்:
அ) துன்மார்க்கனை ஆ) சாத்தானை இ) சத்துருவை ஈ) வீம்புகாரனை
15. ஆவியின்படி '**இதில்**' உண்டாகும் விருத்தசேதனமே விருத்தசேதனம்:
அ) இருதயத்தில் ஆ) சரீரத்தில் இ) சிந்தையில் ஈ) உதடுகளில்
16. வேரானது பரிசுத்தமாயிருந்தால் '**இவைகளும்**' பரிசுத்தமாயிருக்கும்:
அ) கனிகளும் ஆ) இலைகளும் இ) செடிகளும் (ஈ) கிளைகளும்
17. பெருகியது பெருகியது, இது பாவ கிணற்றில் பெருகியது! அநேகர் மேல் பெருகியது அதிகமாய் பெருகியது! ஆக்கினையில் பெருகியது, இது ஆண்டுகொணடு பெருகியது! **இது என்ன?**
18. தங்கமான தம்பதி! தலை-கொடுத்த தம்பதி! சபை-நடத்தும் தம்பதி! சாட்சியான தம்பதி! **யார் இவர்கள்?**
19. ஆராதனை இது ஆராதனை! உடல்-தூய்மை ஆராதனை, உன்னதர்க்கு ஆராதனை! உயிர்பலி ஆராதனை இது ஒப்புவிக்கும் ஆராதனை! **இது என்ன ஆராதனை?**
20. பெலவீனர் நமக்கு 'ஹெல்ப்' பண்ணும் பலசாலி! ஜெபக்குறிப்பு அறியா நமக்காய் 'பிரே' பண்ணும் ஜெபவீரர்! ஆவியின் சிந்தையுடன் 'ரிஸர்ச்' பண்ணும் விஞ்ஞானி! **யார் இவர்?**

பதிலளிக்க கடைசி நாள்: 25-03-2024 படைப்பாசிரியர்: அருட்திரு.எஸ்ஜேடி. தர்மராஜா

பதில் அனுப்பவேண்டிய முகவரி: திருமதி. ஜெயசீலி தர்மராஜா, எஃப்–1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ், எண்: 4/2-A பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை–93. வாட்ஸ்–அப்: 9789914463

# கர்த்தருடைய நாமங்களின் மகத்துவங்கள்

EPISODE-58

பாகம்-58



SIS.C. ANGEL

ஜனங்கள் இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டபொழுது: மெய்யாகவே இவர் தீர்க்கதரிசியானவர் என்றார்கள். யோவா–7:40

When the people heard this saying of Jesus Christ, they said, certainly this man is the Prophet. John-7:40

The Prophet Profitis

## தீர்க்கத்தரிசியானவர்

ப்ரோஃபிட்டீஸ்

நம்முடைய மீறுதல்களினிமித்தம் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் நொறுக்கப்பட்டு, நம்முடைய ஆக்கினையைச் சுமந்து, நம் பாடுகளை அனுபவித்தவரின் நாமத்தில் இரட்சிப்பின் விசுவாசிகளுக்கு சமாதானத்தின் வாழ்த்துக்கள்.

**லூக்-24:19** நசரேயனாகிய இயேசு, தேவனுக்கு முன்பாகவும், ஜனங்களெல்லாருக்கும் முன்பாகவும் செய்கையிலும் வாக்கிலும் வல்லமையுள்ள தீர்க்கத்தரிசியாய் இருந்தார். தம்மைப்போல், தம் பிள்ளைகளையும் மறுரூபப்படுத்தி தீர்க்கத்தரிசன அபிஷேகத்தை ஊற்றி எழுப்புதலில் தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறவர்களாக்குகிறார். அல்லேலூயா

**ஆமோ-3:8,7-15** கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கத்தரிசி மூலம் பேசுகிறார். தமது இரகசியத்தை வெளிப்படுத்தி கலகங்களை, இடுக்கண்களை, கொடுமைகளை கொள்ளையைப்போல் குவித்துக்கொள்கிற அஸ்தோத்தின் அரமனைகள், எகிப்தின் அரமனைகள்... பொய்-வீடுகளுக்கும் (கருப்பு வியாபாரிகள் மற்றும் ஆட்டுத்தோலை போர்த்தியுள்ள கார்போரேட்டுகளுக்கு துணைபோகும் அனைவர் மீதும்) முடிவு வரும் என்கிறார்.

**ஓசி-12:13** மனதளவில் எகிப்துக்குள் இருக்கிற தம் ஜனங்களை தீர்க்கத்தரிசியைக்கொண்டு மீட்டக்கொள்கிறார்.

**எசே-37:1-10** கர்த்தர் கட்டளையிட்டபடியே ஆவிக்குறிய வாழ்வில் உலர்ந்த எலும்புகளாக இருக்கிற தேவபிள்ளைகள தீர்க்கத்தரிசனம் உரைத்து உயிர் அடைந்து காலூன்றி மஹா பெரிய சேனையாய் நிற்கும்படி அபிஷேகிக்கிறார். அல்லேலூயா!

**ஜெபம்:** நவமான இருதயத்தை எங்களுக்குக் கொடுத்து, எங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிடுகிறவரே! உம்மைத் துதிக்கிறோம், ஆபிரகாம், சாமுவேல், மோசே, அகபு, பிலிப்புவின் குமாரத்திகள் போன்ற எலியா, எலிசா, யோவேல்களை எங்கள் திருச்சபையிலும், தேசத்திலும் அபிஷேகித்து எங்களை உமது பாதைகளில் நடக்கச்செய்வீராக. இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம் பிதாவே, ஆமென்.

கிறிஸ்துவுக்குள் உங்கள் அன்பு சகோதரி
C. Angel

தேன்-துளி வேத வசனக் கதை-154

# பெருமை வேண்டாம்!
# தாழ்மை போதும்!

சகோ. M. அசரியா ஞானதாஸ் M.A., M.ED.

அரபு தேசத்தில் நடந்த ஒரு சம்பவம். இரண்டுபேர் காட்டின் வழியே பயணம் செய்தனர். ஒருவர் அரன்மனையில் பணியாற்றும் ஊழியர் மற்றவர் ஒரு வியாபாரி. அந்த வியாபாரி தேவனுக்கு பயந்த ஒரு மனிதர். அவர் தனது வியாபாரத்தில் கிடைத்த ஏராளமான பணத்துடன் பயணம் செய்துகொண்டிருந்தார். அவர்கள் தங்கள் ஊரை அடைவதற்குள் மாலை மயங்கி இருட்டி விட்டது. அந்நகரத்தின் விதிகளின்படி, நகரத்தின் நுழைவாயில் இரவு 10மணிக்கு மூடப்பட்டு மறுநாள் அதிகாலை 5மணிக்கு திறக்கப்படும். இதற்கிடையில் யாரேனும் வெளியிலிருந்து வந்தால் அவர்கள் உள்ளே அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

இந்நிலையில், அந்த இருவரில் ஒருவரான அரண்மனை ஊழியர், ‘‘நான் அரண் மனையில் வேலைசெய்கிறேன், எனவே வாயிற்காவலன் எனக்காக கதவைத் திறந்து விடுவான்’’ என பெருமை பேசிக்கொண்டே வந்தார். ஆனால் வியாபாரியான தேவ மனிதனோ, மனதுக்குள், ‘‘நான் பாடுபட்டு சம்பாதித்த பணத்தை கொண்டுவருகிறேன் எனவே நகர வாயில் அடைக்கப்பட்டாலும் தேவன் எனக்கு உதவிசெய்வார்’’ என்ற விசுவாசத்தோடு வந்தார். நகர நுழைவாயில் வந்ததும் அரன்மனை ஊழியர் பெருமை யுடன் வாயிற்காவலரை அணுகினார்; ஆனால், காவலர் கதவை திறக்கவில்லை. ஆனால் அந்த தேவமனிதனோ, காவலரை அணுகி, ‘‘ஐயா! வியாபாரத்தில் கிடைத்த ஏராளமான பணம் என்னிடம் உண்டு. நான் வெளியே தங்கினால் திருடர்கள் பணத்திற் காக என்னை கொன்றுவிடுவார்கள், எனவே தயவுசெய்து என்னை உள்ளே அனுமதி யுங்கள்’’ என தாழ்மையுடன் கேட்டார். அவரது நிலையை அறிந்த காவலர், வாயிற்கதவை திறந்து அவரை உள்ளே அனுமதித்தார். அவரோடு அந்த அரன்மனை ஊழியரும் உள்ளே பிரவேசித்தார். எனவே, அந்த தேவமனிதர் வாயிற்காவலருக்கும், ஆண்டவராகிய இயேசுவுக்கும் நன்றி செலுத்திவிட்டு, தன் வீட்டிற்கு பத்திரமாக சென்று சேர்ந்தார்.

பிரியமானவர்களே! நாமும்கூட அந்த அரன்மனை ஊழியரைப்போல, ‘‘பெருமைபேசி காரியம் சாதித்துவிடலாம்’’ என எண்ணாமல், தேவனுக்கு பயந்த அந்த வியாபாரி யைப்போல் நம் தேவைகளுக்காக கடவுளிடம் தாழ்மையுடன் கேட்க்கும்போது, இயேசு சுவாமி நமக்கு இரங்கி, நமது துன்பம், துக்கம், வியாதி, வறுமை போன்ற கஷ்டங் களிலிருந்து நம்மை விடுவித்து நம்மை மேன்மைப்படுத்துவார். பரிசேயன்போல் பெருமையாக ஜெபிக்காமல், ஆயக்காரன்போல், ‘‘தேவனே! பாவி யாகிய என்மேல் கிருபையாயிரும்’’ என தாழ்மையாக ஜெபித்து இயேசு கிறிஸ்து தரும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென். வேதம் இவ்விதம் சொல்லுகிறது:


சகோ. அசரியா

பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார்,
தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார். 1பேதுரு 5:5

ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய
பலத்த கைக்குள் அடங்கியிருங்கள். 1பேதுரு 5:6

Bro. M. Azariah Gnanadoss M.A., M.Ed.
Editor, ‘Ratchippu’ Tamil Christian Monthly Magazine, Chennai-93. Mobile: 9962924900

## இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு

1ம் நூற்றாண்டு முதல் 21ம் நூற்றாண்டு வரை

EPISODE 20

# இரண்டாயிரம் ஆண்டு வரலாறு.. இரண்டாம் வருகைக்குத் தயாராகு...

கட்டுரை ஆசிரியர்
அறிவர். திருமதி. சலோமி மனோகர்




இந்திய திருச்சபை சரிதை:
(1முதல் 21ம் நூற்றாண்டுவரை)
தொகுதி-4 பகுதி-5

**4. கிறிஸ்தவப்பணியின் ஆரம்பம்**

**5. போர்சுகீசியர் ஆட்சியில் கிறிஸ்தவம் சாராத மக்கள்**

போர்சுகீசியரின் ஆட்சி காலத்தில், கிறிஸ்தவத்திற்கு மாறியோரின் எண்ணிக்கை ஒருபோதும் மிக அதிகமாக இல்லை. ஒரு வலுவான மற்றும் நடுநிலை சக்தியின் பாதுகாப்பு கருதி தாழ்த்தப்பட்ட தாழ்த்தப்பட்ட சாதியினர் கிறிஸ்தவர் ஆனார் கள். மேலும், சட்டத்தின்படி ஞானஸ்நானம் பெறுவதில் எந்த சிரமமும் இல்லை என்றே தெரிகிறது. அதனால்தான் கிறிஸ்தவ சமூகத்தின் வளர்ச்சி ஆரம்ப நாட்களில் கணிசமாக இருந்ததாகத் தெரிகிறது. எனினும், போர்ச்சுகீசியரின் ஆட்சியில் கட்டாய மதமாற்றம் எதுவும் நடைபெறவில்லை. போர்த்துகீசியர்கள், ஞானஸ்நானத்தை, பாதுகாப்பு வழங்குவதற்கான நிபந்தனையாக மாற்றியதுதான் கிறிஸ்தவத்தின் வளர்ச்சிக்கு சாதகமான சூழலாக மாறியது. பரம்பரை ஆட்சி யாளர்கள் ஒருபோதும் வெளிநாட்டினரை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளவில்லை. கோவா மக்கள், கடற்கொள்ளையருக்கு பயந்ததினால் ஆட்சியாளர்கள் தரும் பொதுவான பாதுகாப்பு கருதி, கிறிஸ்துவர் ஆவதற்கு எந்த தயக்கமுமின்றி சகிப்புத்தன்மையுடன் தீர்மானித்ததாகத் தெரிகிறது.

16ம் நூற்றாண்டில், உருவ வழிபாடானது கடவுளுக்கு அருவருப்பானது என்ற உலகளாவிய பார்வை கிறிஸ்தவர்களால் உருவாக்கப்பட்டிருந்தது. எனவே, பொது இடங்களில் சிலைகளை வைக்கவும், ஊர்வலம் செல்லவும், இந்து சடங்குகளை பொது நிகழ்ச்சியாக நடத்தவும் தீவிர கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. அரசன் தன் ஆட்சியின் மீதான கடவுளின் கோபத்தை குறைப்பதற்காகவே இக்கட்டுப்பாடு செய்யப்பட்டதாக நம்பப்பட்டது.

இதற்குமேல், போர்த்துகீசியம கிறிஸ்தவர் அல்லாத சக-பிரஜைகளின் நம்பிக்கை

யில் தலையிட்டது இல்லை. எல்லா முஸ்லீம் ஆட்சியாளர்களும் மோசமான வர்களாக இல்லை; எனினும், கோவாவை, முஸ்லீம் ஆட்சியாளர்கள் கைப்பற்றி யதைத் தொடர்ந்து ஒரு பீதி ஏற்பட்டது. இதில் பல இந்துக்கள் தப்பி ஓடினர். ஆனால், நிலைமை சீரானபோது அவர்கள் திரும்பிவந்தனர். போர்த்துகீசியர் களின் நிலத்தில் பயிரிடவும், கப்பல்கள் மற்றும் வணிக நிறுவனங்களில் கடைநிலை பணி செய்யவும் வேலையாட்கள் அதிக அளவில் தேவைப்பட்டனர். நீண்ட காலமாக இவ்வேலைகளில் பழகியவர்கள் தப்பிச் சென்று திரும்பியதும், பழைய நிர்வாக முறைகள், மற்றும் வழிகளில் மக்களை சேர்த்துக்கொண்டு ஆட்சிசெய்ய புதிய ஆட்சியாளர்கள் தீர்மானித்தனர்.

கி.பி.1511-ல் டோம் பைர்ஸ் என்ற போர்த்துகீசிய மருத்துவர் இந்தியாவிற்கு வந்தார். அவர் ‘‘கோவா பகுதியில் ஏராளமான புறஜாதிகள் உள்ளனர். அவர்களில் சிலர் மிகவும் செல்வம் கொண்ட மரியாதைக்குரிய மனிதர்கள். கிட்டத்தட்ட முழு ராஜ்யமும் அவர்களுடையது. பூர்வீகவாசிகளாக சொந்த நிலங்களை உடைய அவர்கள் தங்கள் தோட்டங்களில் வாழ்கிறார்கள்; மேலும், நிலத்துக்கு வரி செலுத்துகிறார்கள். அவர்களுக்கு, சொந்தமாக கோவில்கள் உள்ளன; அதில் புரோகிதர்கள் அல்லது பிராமணர்கள் உள்ளனர். புரோகிதர்கள் புத்திசாலிகள், விவேகமுள்ளவர்கள், மதக்கல்வி கற்றவர்கள்; குறிப்பாக, புறஜாதிகளில் இவர்கள் மதம் மாறாதவர்கள்’’ என எழுதியுள்ளார்.

கி.பி.1543ம் ஆண்டு ஜனவரி 6ம் தேதி, மைக்கேல் வாஸ் என்பவர், அரசருக்கு எழுதிய தனது நீண்ட கடிதத்தில் ஃபேபியனைப் பாராட்டியதைத் தவிர வேறு எதையும் குறிப்பிடவில்லை. அவருடன் வந்திருந்த பிரான்சிஸ் மெலோவின் குடும்பத்தைச் சேர்ந்த கோன்கால்வேஸ் தனது அப்போஸ்தலிக்க வைராக்கி யத்தை வெளிப்படுத்தி, அனைத்து பகோடாக்கள் மற்றும் சிலை வழிபாட்டு வீடுகளையும் அழித்து வீழ்த்தியது உண்மை என்பதையும், கி.பி.1545ல் ஜேசுயிட் நிக்கோலஸ் லான்சிலோட்டோ கோவாவிற்கு வந்த நேரத்தில், கோவில்கள் எதுவும் இல்லை என்பதையும் அவரது பதிவிலிருந்து அறிய முடிந்தது.

போர்த்துகீசியர் தங்கள் 30ஆண்டு ஆட்சியில், கட்டாய மதமாற்றம் எதுவும் செய்யவில்லை. ஆனால், போர்த்துகீசிய மதகுருமார், கிறிஸ்தவ நம்பிக்கையை புகுத்தவும், பண்டிகைகளை நடத்தவும் தங்களால் இயன்றதை எல்லாம் செய்த தால் இந்து வழிபாட்டு முறைகள் பெருமளவில் குறைந்தன. உயர் சாதியினர் மதம்-மாறும்போது தங்கள் சாதி அந்தஸ்தை இழக்க வேண்டியதிருந்ததால் அவர்கள் கிறிஸ்தவ நம்பிக்கைக்கு மாற, சாதி பெரும் தடையாக இருந்தது. ஆனால், தாழ்ந்த சாதியினர் மதம்-மாறுவது அவர்கள், சம-அந்தஸ்து மற்றும் பதவி-உயர்வு பெற வாய்ப்பாக இருந்தது. ஞானஸ்நானத்தில் போர்த்துகீசிய பெயர்களை இடும் வழக்கம் கிறிஸ்தவரல்லாத மக்களை ஒருங்கிணைத்தது.

கி.பி.1548-வரை போர்ச்சுகல் ஆட்சியர்கள் இந்திய குடிமக்கள் மீது கொண்டிருந்த நல்லெண்ணம் மற்றும் பெருந்தன்மையால் கோவாவில் பல தேவாலயங்கள், கல்லூரிகள் மற்றும் மருத்துவமனைகளை பல ஆண்டுகளாக நடத்தி வந்தனர். போர்த்துகீசியரின் நலனுக்காக பயன்படுத்தப்பட்ட அனைத்தும் பின்னர், இந்திய

மக்களின் நலனுக்காக நேரடியாக பயன்படுத்தப்பட்டது. இவ்வித செயல்பாடுகள் காரணமாக அவர்கள் மதச்சார்பற்ற குருமார் மற்றும் பிரான்சிஸ்கன்களால் வெகுவாய்ப் புகழப்பட்டனர். இவ்வாறு, டொமினிகன்கள் கோவாவில் தங்களை வலுவாக நிலைநிறுத்திக்கொண்டனர்.

இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு தொடரும்...

Author: Dr. Mrs. Salomi Manohar, Asst. Professor Rtd., (Pope's College, Sawyerpuram)
Thiruvanmiyur, Chennai. South India

# PRAYER-WINDOW PRAYER-WINDOW

# ஜெப-ஜன்னல் ஜெப-ஜன்னல்

## ஜெப-ஜன்னல் ஜெப நேரங்கள் மார்ச் - 2024

| | |
|---|---|
| **ஜெப-ஜன்னல்-1 காலை-ஜெபம்** | நாள்: 08-03-2024 இரண்டாம் வெள்ளி<br>நேரம்: காலை 5-முதல் 6-மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-2 மதிய-ஜெபம்** | நாள்: 15-03-2024 மூன்றாம் வெள்ளி<br>நேரம்: மதியம் 1-முதல் 2-மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-3 இரவு-ஜெபம்** | நாள்: 22-03-2024 நான்காம் வெள்ளி<br>நேரம்: இரவு 8-முதல் 10-மணி வரை. |

பிரியமானவர்களே! இந்த ஜெப-ஜன்னல் ஜெப-நேரங்களில் தானி-6:10 வசனத்தின்படி **''தானியேல், மேலறையில் எருசலேம் தேவாலயத்திற்கு நேராய் பலகணிகள் திறந்திருக்க''** ஜெபித்ததைப்போல் நமது இயக்குநரும், ஜெப-ஜன்னல் ஜெப-வீரர்களும் ஆலயம் நோக்கி ஜெபிக்கவிருக்கிறார்கள். நீங்களும் இந்த நேரங்களில் உங்கள் ஆலயம் நோக்கி ஜெபிக்கும்படியாக அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

**CONTACT DETAILS OF OUR MINISTRIES:**

**MOBILE:** 9962924900/7871676100
**WHATSAPP:** 9789914463/7871676100
**E-MAIL:** sjddharmaraja@gmail.com
**POSTAL ADDRESS:** REV. S.J.D. DHARMARAJA, MISSION DIRECTOR, NO: 4/2-A, BARATHI ST., GANDHI NAGAR, SALIGRAMAM, CHENNAI - 93
**WEBSITE:** www.ratchippu.com

**BANK DETAILS FOR SENDING OFFERTORY:**

NAME: DHARMARAJA SJD.
S.B. ACCOUNT NO: 601071548.
BANK AND BR.: INDIAN BANK, NESAPAKKAM
IFSC CODE: IDIB000N122.
BANK ADDRESS: NESAPAKKAM, CHENNAI-78.
GOOGLE PAY (G-PAY) NAME AND NO.:
REV. DHARMARAJA SJD: 9789914463

**வேதாகம போட்டிக்கான பதில்களை அனுப்பவேண்டிய முகவரி**

திருமதி. ஜெயசீலி தர்மராஜா, எஃப்–1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ், எண்: 4/2-A, பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை–93. வாட்ஸ்–அப்: **9789914463**

**ADDRESS FOR SENDING ANSWERS OF BIBLE CONTEST**

Mrs. Jeyaseeli Dharmaraja, F-1, First floor, Bharathi flats, No: 4/2-A, Bharathi Street, Gandhinagar, Saligramam, Chennai-93. E-mail: ratchippu@hotmail.com/ sjddharmaraja@gmail.com. Whatsapp: 9789914463

# ஜெப-ஜன்னல் ஜெப-குறிப்புகள்

கர்த்தரை நோக்கி மன்றாடுவோம் - Come! Let us all intercede to God

1) அகில உலக சமாதானத்துக்காக... இஸ்ரேல்-ஹாமாஸ் போர் மற்றும் உக்ரைன்-ரஷ்யா போர் முடிவுக்கு வர... இலங்கை, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் வங்கதேச பொருளாதாரம் சீரடைய... பேரிடர்களின் சேதங்களிலிருந்து மக்கள் பாதுகாக்கப்பட...

2) இந்திய மக்களின் நல்வாழ்வுக்காக... இந்தியாவில் மதவாதம், பிரிவினைவாதத்தை ஊக்குவிப்பவர்களின் சூழ்ச்சிகள் முறியடிக்கப்பட.... சிறுபான்மையினருக்கு எதிரான ஒடுக்குதல்கள் நிறுத்தப்பட... நடைபெறவிருக்கும் இந்திய பாராளுமன்றத் தேர்தல்கள் நேர்மையாக நடைபெற... நீதிமன்றங்களில் நீதியரசர்கள் பாரபட்சமின்றி நீதி வழங்க...

3) தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக... மக்கள், இன - மத - மொழி வேறுபாடின்றி அமைதியாக வாழ... தமிழ்நாட்டில் விவசாயம், தொழில்கள், வியாபாரம் சிறக்க... அரசியல் குழப்பங்கள் முடிவுக்கு வர... தமிழ்நாட்டில் மத-வாத சக்திகள் கட்டுப்படுத்தப்பட...

4) திருமதி. மெர்லின், திருமதி. பாக்கியா, திருமதி. திலகவதி மகேஷ், திருமதி. வைலட், திருமதி. சுதா, திருமதி. பிரியா சுதிர், திருமதி. புஷ்பாவதி, திருமதி. ஹனா விஜய் ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க...

5) பிரி-கே.ஜி முதல் பி.ஹெச்.டி வரையில் பொதுத்தேர்வு மற்றும் ஆண்டிறுதித் தேர்வை எழுதும் நம் பிள்ளைகளுக்காக.... 10ம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதும் நம் பிள்ளைகள் எஸ்தர் பெரின், ஜசிந்த் ஹேனா, ஷீபா ஆகியோருக்காக... அவர்களுக்கு சிறந்த ஞானமும், ஞாபக-சக்தியும் அருளப்பட....

6) உயர்-கல்வி பயிலும் நம் பிள்ளைகள் சிப்ரா, ஜாஸ்மின், ஜாஷ்வா மேத்யூ, வில்சன், DR. கிறிஸ்டினா, கிப்ட்சன் தங்கராஜ், பிரின்ஸ் ஜேக்கப், ஜெனிபர், சிந்தியா பிரகாஷ், ஜோப்னா ஆகியோருக்கு சிறந்த ஞானம் வழங்கப்பட....

7) திருமதி. வி. மல்லிகா, திரு. நெல்சன் (நகோமி), திரு. வெஸ்லி சாமுவேல், REV. கருணாகரன், திரு. ஆபிரகாம் மனோகர், திரு. டெம்பிள் வில்லியம், அன்னாள் ஜெபக்கனி, திரு. அப்பன் டேவிட், திருமதி. ஃபிளாரன்ஸ் ராஜமணி ஆகியோரின் சரீர சுகத்திற்காக...

8) திருமதி. ராஜேஷ்வரி, திரு. டேனியல், திருமதி. ஜெயா சாமுவேல், திருமதி. ஜரீன் வாக்கர், திருமதி. ஞானம் ஜெபராஜ், திருமதி. சுந்தரிபாய், திருமதி. ஞானம் ராஜசேகர், திருமதி. செல்வி பாண்டியன், DR.ஷீபா, திருமதி. ஜலீன் செல்லத்துரை, திருமதி. ரத்னாபாய் சாம், திருமதி. வசந்தா அன்பன், திருமதி. சுகிர்தா சின்னதுரை ஆகியோரின் குடும்ப ஆசீர்வாதங்களுக்காக...

9) நமது ஊழிய ஆதரவாளர்களான திருமதி. ஜெயா ஆல்பர்ட், திருமதி. சுஜாதா சாமுவேல், திருமதி. ஷீலா இஸ்ரவேல், திரு.ஜே.ஆர். டேவிட், செல்வி. ஷைனி, திருமதி. அரோமா சாத்ராக், திரு. சாம்சன் ஆபிரகாம், திரு. எஸ்.ஜே.பி. ராஜா, திரு. அசரியா ஞானதாஸ், திருமதி. நிறைமதி ஜாண்ஸன் திருமதி. வனஜா ஹெர்பர்ட், திருமதி. லிஸி ஜீவா வசந்தி, திருமதி. கிரேஸ் பொன்மணி ரெக்ஸ், திருமதி. சுகிர்தா சின்னதுரை பாஸ்டர். எமர்சன் ஆகியோருக்காக... அவர்களது குடும்பத்தாருக்காக...

Ratchippu Tamil Monthly. Registered News Paper.
Date of Publication: First week of every month
RNI Regn. No.: TNTAM/2012/48197. Postal Regn. (RNP) No.: TN/CC (S) DN/468/22-24.
Licensed to post without prepayment under WPP No.: TN/PMG(CCR)WPP-583/22-24.
Due date for Posting: 8th, 9th & 10th of every month. Posted on: 9th March 2024.
Posted at: RMS Patrika Channel Window, Egmore, Chennai-600 008.



# செய்தித்துளிகள்

1. அமெரிக்காவின் 'இன்ட்யூடிவ் மெஷின்ஸ்' நிறுவனத்தின் 'ஒடிசியஸ்' விண்கலம் நிலவில் வெற்றிகரமாக தரையிறங்கியது. நிலவின் தென்துருவத்தில் விண்கலத்தை இறக்கிய முதல் தனியார் நிறுவனம் என பெயர் பெற்றது 'இன்ட்யூடிவ்'.

2. மங்கள்யான்-1 விண்கலத்தின் 8ஆண்டு பணிகள் நிறைவடைந்த நிலையில், லேண்டர்-ரோவர்-ட்ரோன் கருவிகள் அடங்கிய மங்கள்யான்-2 விண்கலத்தை செவ்வாய் கிரகத்துக்கு அனுப்ப இந்தியா (இஸ்ரோ நிறுவனம்) திட்டம்.

3. சென்னை மாநகரில் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பூங்காக்கள், பேருந்து-நிலையங்கள், கடற்கரை போன்ற 500-பொது இடங்களில் இலவசமாக வை.ஃ.பை வழங்கும் திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் தொடங்கிவைத்தார்.

4. விண்டோஸ்-95 முதல் அனைத்து ஒ.எஸ்-களிலும் கடந்த 28ஆண்டு காலமாக இடம் பிடித்து வந்த MS WordPad மென்பொருளுக்கு மைக்ரோசா.ஃ.ப்ட் நிறுவனம் விடை கொடுக்க உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

5. அகமதாபாத் டிபன்டர்ஸ், சென்னை பிளிட்ஸ் உள்ளிட்ட 9-அணிகள் பங்குபெறும் பிரைம்-வாலிபால்-லீகின் 3-வது-சீசன், சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் பிப்-15ல் தொடங்கியது. இறுதிப் போட்டி மார்ச்-21ல் நடைபெறும்.

Posted on: 9th March 2024

To

## ஈஸ்டர் நல்வாழ்த்துக்கள்

**BLESSED LENT**

**இரட்சிப்பு** பத்திரிக்கையின் அன்பான வாசகர்கள், ஆதரவாளர்கள், படைப்பாளர்கள், ஜெப-ஜன்னல் ஜெப வீரர்கள், அலுவலக-வலைதள பணியாளர்கள், கைபிரதி களப்பணியாளர்கள், வேதாகம போட்டிகளில் பங்கு பெறுவோர், அச்சகத்தார், தபால்-துறை அன்பர்கள், அனைத்துத் திருச்சபை இறைமக்கள் மற்றும் இரட்சிப்பு விசுவாசக் குடும்பத்தார் ஆகிய உங்கள் அனைவருக்கும் எங்கள் உள்ளம் கனிந்த **ஈஸ்டர் நல்வாழ்த்துக்கள்.**

**இரட்சிப்பு**
ஊழிய-குடும்பத்தார்



**Blessed Easter - 2024**

If undelivered Please return to:

REV.S.J.D. DHARMARAJA
MISSION DIRECTOR
RATCHIPPU TAMIL MONTHLY,
NO: 4/2-A, BHARATHI STREET,
GANDHI NAGAR, SALIGRAMAM,
CHENNAI -93, TAMILNADU, SOUTH INDIA.

Owned & Published by: S.J.D.Dharmaraja. Published from No:6-A, Ambedkar St., Gandhinagar, Saligramam, Chennai-93. Printed by: S.Isaac Prince at Sams Graphics, No: 1, 12th Avenue, Ashok Nagar, Chennai - 600 083. Editor: M. Azariah Gnanadoss.